மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப், பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.